செய்தி வெளியீடு எண்:1109 நாள்:14.11.2021

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் இன்று (14.11.2021) அம்பத்தூர் மற்றும் திருமழிசை சிட்கோ தொழிற் பேட்டையில் உள்ள தாழ்வான பகுதிகளில் வெள்ள நீரை வெளியேற்றுபடுவதையும், திருமழிசை தொழிற் பேட்டையில் நடைபெற்ற கோவிட் –19 தடுப்பூசி முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தெரிவிக்கையில் அம்பத்தூர் சிட்கோ தொழிற்பேட்டை 1167 ஏக்கர் பரப்பளவில் , 1800 தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்களில் 53000 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறையின் சார்பில் செயல்பட்டு வரும் அம்பத்தூர் சிட்கோ தொழிற்பேட்டையில் கடந்த ஒரு வார காலமாக பெய்த கன மழையின் காரணமாக அம்பத்தூர் ஏரியிலிருந்து வெளியேறிய நீர் கொரட்டூர் ஏரிக்கு சென்றடையவேண்டும். கொரட்டூர் ஏரிக்கு செல்ல வேண்டிய வடிகால்களில் அடைப்பு ஏற்பட்டதால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியதால் 300 க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் பாதிப்புக்கு உள்ளாகியது.

அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் எனது கவனத்திற்கு இதனை கொண்டு வந்தவுடன் இன்றைய தினம் அரசு செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆகியோருடன் இப்பகுதியை ஆய்வு செய்தோம். ஆய்வில் அம்பத்தூர் ஏரியிலிருந்து மழையின் காரணமாக வெளியேற்றப்பட்ட உபரி நீர் செல்ல கூடிய வடிகால்கள் அடைப்பு ஏற்பட்டுள்ளது என்பது கண்டறியப்பட்டது. இதனை சீர் செய்தவதற்காக விரைவில் அனைத்து துறைகளின் அதிகாரிகளை அழைத்து

ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடத்தப்படவுள்ளது. வருகின்ற காலங்களில் எவ்வளவு மழை பெய்தாலும் தொழில் நிறுவனங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் இருக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்து சென்று நிரந்தர தீர்வு காணப்படும். தற்பொழுது இயல்பு நிலை திரும்பி உள்ளதால் தொழில் நிறுவனங்கள் தங்கள் பணியினை மேற்கொள்ள தொடங்கி உள்ளனர்.

இந்த ஆய்வில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் சாமுவேல் அவர்கள், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திரு.வி.அருன்ராய், இ.ஆ.ப, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி. கஜலெட்சுமி, இ.ஆ.ப உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**